



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த மாதம் 9ம் தேதி திருச்சி மாவட்டத்தில் நடந்த பல்வேறு நலத்திட்ட பணிகள் தொடக்க விழாவில் திருச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட 54,000 ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கும் பணியை தொடங்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாக ஏழை எளிய மக்கள் குடியிருக்கும் வீட்டிற்கான பட்டா வழங்க வேண்டும் என்பதே தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் லட்சியம், திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, 2006 பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டாக்களை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட

# 2006 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்!

திருவெறும்பூர், ஜூன் 5 -

தமிழக முதல்வர் கடந்த மாதம் 9ம் தேதி திருச்சி மாவட்டத்தில் நடந்த பல்வேறு நலத்திட்ட பணிகள் தொடக்க விழாவில் திருச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட 54,000 ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களை வழங்கும் பணியை தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக ஏழை எளிய மக்கள் குடியிருக்கும் வீட்டிற்கான பட்டா வழங்க வேண்டும் என்பதே தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் லட்சியம். திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, 2006 பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டாக்களை வழங்கிசிறப்புரையாற்றினார் .நடந்த விழாவில் 23 திருநங்கைகள் உட்பட 2006 பேருக்கு இலவச வீட்டு மனைகளை வழங்கினார் . நிகழ்வானது திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநகராட்சி அரியமங்கலம் கோட்ட அலுவலகம் மற்றும் திருவெறும்பூர் ஒன்றிய அலுவலகம் துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார் மண்டலம் மூன்றின் தலைவர் மு.மதிவாணன், துவாக்குடி நகர மன்ற தலைவர் காயம்பு, ஒன்றிய கழகச் செயலாளர்கள் கங்காதரன், கருணாநிதி, பேரூர் கழகச் செயலாளர் தங்கவேலு, பகுதி கழகச் செயலாளர் நீலமேகம், தர்மராஜ், விஜயகுமார், சிவக்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், திருச்சி டி.ஆர்.ஓ.ராஜலட்சுமி, ஆர்.டி.ஓ.அருள், திருவெறும்பூர் தாசில்தார் ஜெயபிரகாசம், செயற்பொறியாளர் ஜெகஜீவன் ராமன் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இலவச வீட்டு மனை பட்டாக்களை தமிழக பள்ளி கல்வி அமைச்சர் அன்பில் மகேஸ பொய்யாமொழி வழங்கி பேசியதாவது:-

தமிழக மக்களை பெரிதும் நேசிக்கும் கலைஞரின் 102 வது பிறந்தநாள் விழாவில் திருவெறும்பூர் தொகுதிக்கு உட்பட்ட சுமார் 2000 த்திற்கும் மேற்பட்டோருக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவது அவருக்கு புகழ் சேர்ப்பதாகும். கையளவு நிலம் இருந்தாலும் அது சொந்த நிலமாக இருக்க வேண்டும் என எல்லோரும் நினைப்பார்கள் தற்பொழுது வீட்டுமனை பட்டா வழங்கியவர்களில் தகுதியானவர்களை கண்டறிந்து கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் அவர்களுக்கு வீடு கட்டி தரப்படும் என்றும் மேலும் நீதிமன்ற குறுக்கீடு உள்ளிட்ட காரணங்களால் வீட்டுமனை பட்டா வழங்க முடியாதவர்களை நாங்கள் கைவிட மாட்டோம் என்றும் உங்களை பாதுகாப்போம் உங்கள் ஆனந்தத்தோடு தற்பொழுது நானும் ஆனந்தமாக கலந்து கொள்கிறேன் என்றார்.

### நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக கிளைச் செயலாளர்கள், பி.எல்.ஏ. 2 வைச் சேர்ந்த

# நிர்வாகிகளின் வாரிசுகள் 57 பேருக்கு கல்வி உதவித்தொகை!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

நாமக்கல், ஜூன் 5-

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள திமுக நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், பி.எல்.ஏ. 2 வைச் சேர்ந்த நிர்வாகிகளின் குடும்பத்தில் உள்ள குழந்தைகளின் கல்வி மற்றும் உயர் கல்விக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகை என்ற பெயரில் கடந்த ஐந்து ஆண்டுகளாக மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கி வருகிறார்.

அதன் அடிப்படையில்

மோகனூர் ஒன்றியம், இராசிபுரம் ஒன்றியம் ஆகிய ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் கிளை செயலாளர்கள், பி.எல்.எ. 2 ஆகியோரின் வாரிசுகளுக்கு கல்வி மற்றும் உயர் கல்விப் பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக அலுவலகம் கலைஞர் இல்லம் பேராசிரியர் அரங்கில் நடைபெற்றது.

இ ந் நி க ழ் ச் சி யி ல் மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன் தலைமை தாங்கினார். ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் ராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு 57 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர்கள் ராசிபுரம் ஜெகநாதன், நாமக்கல் பழனிவேல், மோகனூர் நவலடி, துணை மேயர் பூபதி, நகரச் செயலாளர் ராணா ஆனந்த், சிவகுமார், மாவட்டப் பொதுக்குழு உறுப்பினர் பூவராகவன், மாவட்ட துணை செயலாளர் நலங்கிள்ளி,

மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் பா.கிருபாகரன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒ ரு ங் கி ணை ப் பா ள ர் பொன்.சித்தார்த், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்பரர் வ. இளம்பரிதி, சார்பு அணி துணை அமைப்பாளர்கள் சர்தார், முகேஷ், சத்யசீலன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில் வாணியம் பாடியில் உள்ள மாவட்டக் கழக அலுவகத்தில் அலங்கரித்து வைக்கப் பட்டிருந்த தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி, அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஆலங்காயம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.தாமோதிரன், ஆலங்காயம் மத்திய ஒன்றியப் பொறுப்பாளர் வி.ஜி.அன்பு, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஏ.சி.தேவகுமார், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் எஸ்.ராஜா, மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் சையத் அபீப்தங்கல், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் மு.க.அருள்நிதி மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நேர்முக உதவியாளராக பணியாற்றிய புலவர் முத்து வாவாசி எழுதிய "தியாகிகளை போற்றிய தியாக சீலர் கலைஞர்" என்னும் நூலினை கலைஞர் அவர்களின் பிறந்தநாளான ஜூன் 3 அன்று கும்பகோணம் அருகே உள்ள வலையப்பேட்டை கலைஞர் கோட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தலைமையில், மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. வெளியிட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், மு.சண்முகம் எம்.பி, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் பெற்று கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு

# "தமிழ்ச் செம்மொழி"- மாபெரும் கண்காட்சி!

## ஜூன் 9 வரை நீட்டிப்பு!

சென்னை, ஜூன் 5-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (3.6.2025) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102ஆம் பிறந்த நாளான செம்மொழி நாள் விழா சென்னை கலைவாணர் அரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்ச் செம்மொழி நாளினை முன்னிட்டு சென்னை கலைவாணர் அரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்களின் அரிய ஒ ளி ப் ப ட ங் க ளி ன் தொகுப்பு, தமிழ்ச் செவ்வியல் முதல் பதிப்பு நூல்கள், காலந்தோறும் தமிழ் மற்றும் தமிழ் மொழியின் வரலாறு, தமிழர் தொன்மை குறித்த ஓலைச்சுவடிகள் அடங்கிய "தமிழ்ச் செம்மொழி" கண்காட்சியினை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

மேலும், இக்கண்காட்சியின் சிறப்புகளை பொது மக்கள் அனைவரும் அறிந்து பயன்பெறும் வகையில் ஒரு வார காலத்திற்கு நீட்டிக்குமாறு தெரிவித்துள்ளார்கள். இக்கண்காட்சியில் செம்மொழியான தமிழின் வரலாறு, சிந்துவெளி வரிவடிவங்களும் தமிழ்நாட்டு குறியீடுகளும், தமிழகத்தில் தமிழில் எழுத்துப் பொறிப்புக் கிடைத்த இடங்கள், சங்க கால கல்வெட்டுகள், காலம் தோறும் தமிழ், பானை ஓடுகளில் தமிழில் எழுத்துக்கள் பற்றிய குறிப்பு, வைகை நதி வரும் தங்கத்தில் தமிழ் எழுத்துக்கள் பற்றிய குறிப்பு, திருவாலங்காடு செப்பேடுகள் பற்றிய குறிப்பு, துண்டுக் கல்வெட்டு பற்றிய குறிப்பு, முதலாம் ராஜராஜ சோழன் 23ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு பற்றிய குறிப்பு, வீரசோழபுரம் நடுகல் கல்வெட்டு வீர மரபின் நினைவுச் சின்னம் பற்றிய குறிப்பு, கீழ் முக்கூட்டூர் நடுகல் கல்வெட்டு வீர மரபின் அரிய சான்று பற்றிய குறிப்பு, கலைஞர் கருவூலம் (தொடு திரை வசதியுடன்), நாட்டுடைமை செய்யப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூல்கள் பட்டியல் மற்றும் தமிழர் தொன்மை, தமிழ் செவ்வியல் நூல்களின் முதல் அச்சுப் பதிப்புகள் (காலம் 1812 ஆம் ஆண்டு முதல் 1935 வரை), கடந்த நான்காண்டுகளில் (மே 2021 முதல் மே 2025 வரை) தமிழ் வளர்ச்சித் துறை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வாயிலாக வெளியிடப்பட்ட தமிழ் செவ்வியல் நூல்கள் கண்காட்சியில் அணி செய்யப்பட்டுள்ளது,

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை கலைவாணர் அரங்கம் முதல் தளத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்ச் செம்மொழி குறித்த கண்கவர் கண்காட்சி 3.6.2025 (செவ்வாய்க்கிழமை) முதல் 9.6.2025 (திங்கட்கிழமை) வரை (ஒரு வார காலத்திற்கு) நீட்டிக்கப்படுகிறது. இதனை, பொதுமக்கள், பள்ளி/கல்லூரி மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள், தமிழறிஞர்கள், வரலாற்று அறிஞர்கள் எவ்வித கட்டணமுமின்றி நாள்தோறும் காலை 10.00 மணி முதல் மாலை 6.30 மணி வரை பார்வையிடலாம்.

### பெண்களுக்கு சொத்தில் சம உரிமை கொடுக்கும்

# பெரியார், அண்ணா கண்ட கனவினை நிறைவேற்றியவர் கலைஞர்!

## திண்டுக்கல்லில் ஐ.பி. செந்தில்குமார் எம்.எல்.ஏ. பேச்சு!

திண்டுக்கல், ஜூன் 5-

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தெற்கு ஒன்றியக் கழகத்தின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 102வது பிறந்த நாள் செம்மொழி நாளையொட்டி நத்தம் ரோட்டில் உள்ள தனியார் மண்டபத்தில் கருத்தரங்கம் நடைபெற்றது. தெற்கு ஒன்றியச் செயலாளர் வெள்ளிமலை தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக கிழக்கு மாவட்டச் செயலாளரும் பழநி எம்.எல்.ஏ.வுமான இ.பெ.செந்தில்குமார் கலந்து கொண்டு பேசியதாவது:-



திண்டுக்கல் மாவட்டத்தில் ஒரு காலத்தில் குடிப்பதற்கு சீரான தண்ணீர் பெரும்பாலான பகுதிகளில் இல்லாத நிலை இருந்தது. அப்போது ஆத்தூர், திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதிகளுக்கு காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் முதன் முதலாக கலைஞரால் கொண்டு வரப்பட்டது.

இந்த திட்டத்தால் தான் ஸ்பேஸ் ஒன் பேஸ் 2 என்ற அளவுகோலில் 2 எம்எல்டி தண்ணீர் வரும் சூழல் நம் பகுதிகளுக்கு கிடைத்தது. இந்த பகுதிகளுக்கு நல்ல தண்ணீர் கிடைத்ததற்கு கலைஞர் தான் காரணம். பெண்களுக்கு சொத்தில் சம உரிமை கொடுக்க வேண்டும் என்று பெரியார், அண்ணா கண்ட கனவினை முத்தமிழறிஞர் கலைஞர் சட்டம் இயற்றி நிறைவேற்றினார். உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு கொடுத்தவரும் கலைஞர் தான். இவ்வாறு பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர்கள் மார்க் கிரேட்மேரி, பிலால் உசேன், மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், மாநில வர்த்தகர் அணி இணை செயலாளர் ஜெயன், பொதுக் குழு உறுப்பினர் அக்பர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கணேசன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரபாகரன், மாநகர பொருளாளர் சரவணன், மாவட்ட விவசாய அணி இல. கண்ணன், இலக்கிய அணி முருகானந்தம், வழக்கறிஞர் அணி சூசை ராபர்ட், மாவட்ட மீன வர் அணி அமைப்பாளர் கணேசன், மாவட்ட சுற் றுச்சூழல் அணி தேவேந்திரன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் தேவி இளங்கோ, ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர்கள் குருசாமி. ராதாகிருஷ்ணன், சுப்புலட்சுமி, அலெக்ஸ், ஜெயராமன், செந்தில்குமார், இளைஞர் அணி, ரூபன், சரவணன், தயாளன், மாணவரணி சதீஷ்குமார், வடிவேல். நாகராஜ், சதீஷ் குமார், சங்கர் கணேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

திண்டுக்கல் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக திண்டுக்கல் மண்டலம் தொ.மு.சா. சார்பில் பொதுச் செயலாளர் பொன் செந்தில் தலைமையில் திண்டுக்கல் மாவட்டப் போக்குவரத்து கிளை அலுவலகங்களில் இனிப்புகள் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

திண்டுக்கல் வடக்கு ஒன்றியக் கழகத்தின் சார்பில் திண்டுக்கல் உழவர் சந்தையில் ஒன்றியச் செயலாளர் ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன் தலைமையில் கழக நிர்வாகிகள் துப்புரவு பணியாளர்களுக்கு இனிப்புகள் வழங்கி நலத்திட்ட உதவிகள் வழங்கினர் மேலும் திண்டுக்கல் அன்பரசி ஆதரவற்றோர் குழந்தைகள் காப்பகத்தில் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ., ஆதரவற்றவர்களுக்கு அசைவ உணவுகளை வழங்கி அவருடன் கலந்து உரையாடினார் நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் தலைமை வகித்தார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாளை முன்னிட்டு செம்மொழி நாளாக முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, நெல்லை மத்திய மாவட்ட ப் பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் அறிவுறுத்தலின்படி நெல்லை கிழக்கு மாநகர தி.மு.க சார்பில் நெல்லை பேட்டை கிழக்கு பகுதி டவுண் சந்திபிள்ளையார் கோவில் பேருந்து நிறுத்தம் அருகில் வைத்து நெல்லை பேட்டை கிழக்கு பகுதி செயலாளர் நமச்சிவாயம் கோபி தலைமையில் நெல்லை கிழக்கு மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் மற்றும் மாநில சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு தலைவர் முன்னாள் அமைச்சர் டி.பி.எம் மைதீன்கான் ஆகியோர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர். உடன் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் அலிஃப் மீரான், நிர்வாகிகள் வேங்கை வெங்கடேஷ்,கே.என்.சுப்பையா, கேபிள் குமரேசன், லெனின்,மைக் மணி,திராவிட மணி,வைரமணி, மணி,சுரேஷ்,ஷெட்டி, தளபதி ஆறுமுகம்,ரியல் சுரேஷ்,பெப்சி சரவணன், மகாராஜன்,செந்தில்குமார், பெரியார் ,கணேசபெருமாள்,நாவல்டி நம்பிராஜன்,சிவகுமார் ,ராமசந்திரன், அந்தோணி ராஜ்,வினோத்குமார், செல்வ பெருமாள்,ராஜ்குமார், குமார்,வேல் ஆறுமுகம், இசக்கி ஐயப்பன்,பிரேம் குமார்,வயல்தெரு வெங்கடேஷ்,சோமு,சிவில் சப்ளை முருகன்,பரணி ஆறுமுகம், கார்த்திக்,சௌபர் சாதிக்,விக்னேஷ், மகாராஜன்,சுடலை கண், சங்கர், குமார்,சாலமோன்,சுரேஷ்,பத்மா,பிந்து செய்யது, மணிகண்டன்,அம்பேத் பிரபாகரன், பாலா,பாரதி, உலகநாதன், பாபநாசம்,வேலாயுதம்,பேராத்து செல்வம்,ஆறுமுகம்,மணி,சந்துரு,நீலேஷ்,முருகன் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.